அப்படி ஏதாவது தவறு நடந்தால், அதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டில் பல்வேறு அணைகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் நீர்ப்பாசன வசதிகளைத் தந்து கொண்டிருக்கிறோம். இதுபோன்ற புகார்கள் தனிப்பட்ட முறையிலே வருமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தால், அது பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்படிப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 209, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ்.அமர்நாத் கேட்கிறார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

209—

மின்சாரம் தயாரிக்க வாங்கப்படும் நிலக்கரி

*11799—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சாரம் தயாரிக்க வாங்கப்படும் நிலக்கரியை மானியமாக தர வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சாரம் தயாரிக்க வாங்கப்படும் நிலக்கரியை மானியமாகத் தரவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி எந்த விதமான கோரிக்கையையும் இந்த அரசு வைக்கவில்லை. ஆனால் நிலக்கரியை ரயில் மூலமும், கடல் மூலமும் அதற்குப், பின்னாலே ரயில் மூலம் கொண்டு வருவதால் ஏற்படும் அதிகச் செலவை மட்டும் ஈடுகட்டுமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

முற்பகல் 10-35

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் உத்தரவுப்படி தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை பொதுப்பணித் துறை வழங்கி வருகிறது. இதனால் அரசுக்கு வருமான இழப்பு ரூ. 800 கோடி ஏற்படுகிறது. இந்த இழப்பைச் சரிக்கட்டுகிற வகையில் விவசாயிகளுக்கு வழங்குகிற மின்சாரம் தயாரிக்கிற நிலக்கரி போன்ற உற்பத்திச் செலவை மானியமாக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன் .

1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மின்வாரியத்திற்கு வட மாநிலங்களிலிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்கு அதிகமான செலவு ஏற்படுகிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. இதை நேரடியாக ரயில் மூலம் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து தமிழகத்தின் அனல் மின் நிலையங்களுக்கு கொண்டு வந்து சேர்த்தால் நிலக்கரி கொண்டு வருகிற செலவு குறைவாகத்தான் இருக்கும். இதனால் ஏற்படுகின்ற போக்குவரத்துச் செலவு வித்தியாசத்தை மத்திய அரசு ஈடுகட்டவேண்டுமென்று தெரிவித்து பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 16—7—1991 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் கொடுத்த கோரிக்கை மனுவிலும் இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பிரதமர் அலுவகத்திலிருந்து அப்படிப்பட்ட மானியம் வழங்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. இராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இலவச மின்சாரம் வழங்கி வருகிறது. வட மாநிலங்களிலிருந்து நிலக்கரி கொண்டுவரும் அதிகப்படியான செலவை மத்திய அரசு மானியமாகத் தரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வேறு எந்த மாநிலங்களுக்காவது இப்படிப்பட்ட செலவை ஈடுகட்ட மத்திய அரசு மானியம் தந்து கொண்டிருக்கிறதா ? இலவச மின்சாரம் நாம் தருகின்ற காரணத்தால் சிறப்புத் தன்மையின் அடிப்படையில் மானியத்தைப் பெற அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களுக்கு மானியம் கொடுப்பதாகத் தகவல் இல்லை. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நாம்தான் இலவச மின்சாரத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பது இன்றைக்கு அனைவரும் அறிந்த உண்மை. நம்முடைய அரசு தமிழக விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டுதான் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையேயும் இலவச மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதுபற்றி நாம் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கலாம். அதை அவர்கள் எப்படி பரிசீலிப்பார்கள் என்று தெரியவில்லை. ஆகவே உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக் கொள்ளலாம். மத்திய அரசிடம் கோரிக்கை கொடுக்கலாம். அவர்களுக்கு மனம் வேண்டும் உதவி கொடுப்பதற்கு.